முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 03.06.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 03.06.2026 | சாட்சி | பி.வா.சா. 4 |
| பெயர். | சாரங்கபானி | வயது.. | 56 |
| தந்தை பெயர். | கலியமூர்த்தி | கிராமம்.. | பெரியமேடு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனக்கு விவசாயம் தொழில். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.13 என்ன ஆவணம் என்றால் பரிவர்த்தனை பத்திரமாகும் எனது அப்பா கலியமூர்த்திக்கும், வீரமுத்துவிற்கும் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரமாகும். வாதியின் கணவர் பாலகிருஷ்ணனுக்கும் எனது தகப்பனார் கலியமூர்த்தி மற்றம் சேப்பெருமாள் மற்றும் வீரமுத்து இவர்களுக்குள் இருக்கும் உறவுமுறை என்னவென்றால் எனது தாத்தாவிற்கு 3 தாரம் இருக்கிறார்க்ள் அதில் சேப்பெருமாள் 1 தாரத்து மகன், நாராயணசாமி, உத்தண்டி 2 தாரத்து பிள்ளைகள், ராமலிங்கம் 3 தாரத்து மகன் ராமலிங்கத்தின் பேரன் நான் ஆவேன். ராமலிங்கமும் பாலகிருஷ்ணனும் இரத்த உறவுமுறை இல்லை என்றால் பாலகிருஷ்ணன் உத்தண்டியின் பேரன் ஆவார். பி.வா.சா.ஆ.14 பாலகிருஷ்ணன் அவரது மனைவி' ஜெயலட்சமி இருவரும் எனது அப்பாவிற்கு கிரயம் கொடுத்த பத்திரமாகும். பி.வா.சா.ஆ.14 பத்திரத்தின் சொத்துக்கள் எவ்வாறு ஜெயலட்சுமிக்கு பாத்தியம் என்று பத்திரத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.14 சொத்துக்கள் பாலகிருஷ்ணனுக்கு சுயசம்பாத்திய சொத்துக்கள் அல்ல என்றால் சரிதான். பாலகிருஷ்ணனுக்கு செல்வி, தங்கமணி என்ற பிள்ளைகள் இருக்கிறார் மற்றவர் பெயர் தெரியவில்லை. அவர்கள் வழக்கில் தரப்பினர்கள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு சொத்து கொடுக்கும் சமயத்தில் மேற்சொன்ன மூவரும் இருந்தார்கள் என்றால் கடைசி மகள் அப்போது

பிறக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். பி.வா.சா.ஆ.14 பத்திரம் மைனர்களை கட்டுபடுத்தி ஏற்படுத்தபடவில்லை என்றால் சரிதான். 1978 இல் ஜெயலட்சுமிக்கு பி.வா.சா.ஆ.14 சொத்துக்களும், இதர சொத்துக்களும் பாத்தியமாக இருந்தது என்ற விபரம் தெரியும். எனது தகப்பனார் கிரயம் பெற்ற சொத்துக்கள் உரிமை மாற்றம் பெறுவதற்கு தகுதியற்றவை என்று சொன்னால் சரியல்ல. ஏன்னென்றால் உரிய தரப்பினர்கள் உரிமை மாற்றம் செய்து தரவில்லை என்றால் சரியல்ல. 01.11.1978 இல் 1ம் வாதி ஜெயலட்சமிக்கு கலியமூர்த்தி விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியும், விடுதலை பத்திரம் மூலமாக ஜெயலட்சுமிக்கு வழக்கு சொத்தை கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான்.

3. புல எண்.102/11 இல் கீழ்புரம் 18 செண்ட் 1ம் வாதிக்கு விடுதலை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிராதில் 7 வது ஐட்ட சொத்தை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள ஆவணமானது முழுமையான உரிமை வழங்க தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை பொறுத்து உரிய பாகஸ்தர்களிடமிருந்து உரிமை மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.